# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 12.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6702/SCIC/2020**

திரு ச.ஜெயபாரதி -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகம்,
விருதுநகர். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 19.03.2020 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், VRD 20011F00118093 இவ்வடையாள எண் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது தொடர்பாக 3 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 08.05.2020-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 22.05.2020 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 20.08.2020-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 16.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 06.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 12.10.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை ந.க.எண்.அ1/1845/2020, நாள் 01.10.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 11.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். SA-6702/**SCIC/2020**</u>

<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகம்,
விருதுநகர்.

<u>மனுதாரர்</u>
திரு ச.ஜெயபாரதி,
த/பெ.வி.சங்கரன்,
3/37, க.சத்திரப்பட்டி,
வெம்பக்கோட்டை,
விருதுநகர்.
PR/PS 16.11.2020

பதிவஞ்சல்

அனுப்புநர்

திருமதி.இரா.சாந்தா, பி.எஸ்.சி.,
பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
விருதுநகர்.

பெறுநர்

மாநில தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
2, தியாகராயர் சாலை(ஆலையம்மன்
கோயில் அருகில்) எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

SA 6702/2020

TAMILNADU INFORMATION COMMISSION
05 OCT 2020
032535
CHENNAI 600 018

ந.க.எண் அ1/ 1845 /2020, நாள்: 01.10.2020

ஐயா,

பொருள்: தமிழ்நாடு தகவல் ஆணையம் - தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் கீழ் - திரு.S.ஜெயபாரதி, கே.சத்திரப்பட்டி, வெம்பக்கோட்டை அஞ்சல், விருதுநகர் மாவட்டம் அவர்கள் சில தகவல் கோரியமை – தகவல் அனுப்பி வைக்கப்பட்டமை – தமிழ்நாடு தகவல் ஆணையம் வாயிலாக ஆணை பெறப்பட்டது – தகவல்கள் தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை:
1) மாநில தலைமைத்தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம், தியாகராயர் சாலை,தேனாம்பேட்டை 600 018 அவர்களின் ஆணை எண் SA 6702/மா.த.த.ஆ/2020 நாள்: 16.09.2020 (இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள்: 29.09.2020)
2) விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக கடிதம் எண் அ1/1845/2020 நாள்: 01.10.2020 (மனுதாரர் S.ஜெயபாரதி அவர்களது முகவரியிடப்பட்டது)

*****

பார்வை (1) இல் காணும் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களின் ஆணைக்கிணங்க, மனுதாரர் திரு.S.ஜெயபாரதி அவர்களுக்கு பார்வை 2 இல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக உரிய தகவல் அனுப்பி வைக்கப்பட்டது (மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது) என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

1/10/2020

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
விருதுநகர்.

இணைப்பு: மேற்படி.

1/10/2020

-பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்-

அ1/ 1845 /2020

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம்,
விருதுநகர். நாள். 01.10.2020

பெறுநர்

திரு.S.ஜெயபாரதி,
S/O.சிங்கரன்,
3/37, K.சத்திரப்பட்டி,
வெம்பக்கோட்டை (அஞ்சல்) 626 131.
விருதுநகர் மாவட்டம்.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு தகவல் ஆணையம் - தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் கீழ் - திரு.S.ஜெயபாரதி, கே.சத்திரப்பட்டி, வெம்பக்கோட்டை அஞ்சல், விருதுநகர் மாவட்டம் அவர்கள் சில தகவல் கோரியமை – தகவல் அனுப்பி வைக்கப்பட்டமை – தமிழ்நாடு தகவல் ஆணையம் வாயிலாக ஆணை பெறப்பட்டது – தகவல்கள் தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை:

1) திரு.S.ஜெயபாரதி, கே.சத்திரப்பட்டி, வெம்பக்கோட்டை அஞ்சல், விருதுநகர் மாவட்டம் அவர்களின் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனு விண்ணப்பம் நாள்: 19.03.2020 (மனு இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 23.03.2020)
2) திரு.S.ஜெயபாரதி, கே.சத்திரப்பட்டி, வெம்பக்கோட்டை அஞ்சல், விருதுநகர் மாவட்டம் அவர்களின் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனு விண்ணப்பம் நாள்: 08.05.2020 (மனு இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 18.05.2020)
3) விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக கடிதம் எண் அ1/931/2020 நாள்: 22.05.2020 (மனுதாரர் S.ஜெயபாரதி அவர்களது முகவரியிடப்பட்டது)
4) மாநில தலைமைத்தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம், தியாகராயர் சாலை,தேனாம்பேட்டை 600 018 அவர்களின் ஆணை எண் SA 6702/மா.த.த.ஆ/2020 நாள்: 16.09.2020 (இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள்: 29.09.2020)

-------------

பார்வை (4) இல் காணும் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களது ஆணையுடன் பெறப்பட்ட தங்களது 19.03.2020 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 இன் கீழான மனுவிற்கு பின்வருமாறு தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

19.03.2020 நாளிட்ட தங்களது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 இன் கீழான மனு இவ்வலுவலகத்தில் 23.03.2020 அன்று பெறப்பட்டது. 25.03.2020 முதல் 17.05.2020 வரை அரசாணை (எம்.எஸ்) எண் 172, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (டி.எம்.II) துறை நாள்: 25.03.2020 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண் 190, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (டி.எம்.II) துறை நாள்: 13.04.2020 இன்படியும் அரசாணை (எம்.எஸ்) எண் 217, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (டி.எம்.II) துறை நாள்: 03.05.2020 கோவிட்-19 வைரஸ் நோய் தொற்று பரவல் காரணமாக ஊடரங்கு அமலில் இருந்ததால் அலுவலகம் செயல்படவில்லை. அரசாணை எம்.எஸ்.239, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (டி.எம். II) துறை, நாள்: 15.05.2020 இன் படி

-த.பி.பா.-

50% பணியாளர்களை கொண்டு சுழற்சி முறையில் பணிபுரிய அரசால் ஆணையிடப்பட்டு, 18.05.2020 முதல் அலுவலகம் செயல்பட தொடங்கியதைத் தொடர்ந்து, 19.03.2020 நாளிட்ட தங்களது மனுவிற்கு பார்வை (3) இல் காணும் கடிதம் வாயிலாக தங்களுக்கு உரிய தகவல் அளிக்கப்பட்டது (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

தங்கள் உண்மையுள்ள

1/10/2020

பொதுத்தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
விருதுநகர்.

இணைப்பு: மேற்கண்டவாறு

1/10/2020

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

மாநில தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோவில் அருகில்)
எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை – 600 018.

பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன் 15

தமிழ்நாடு அரசு
தேசிய வேலைவாய்ப்புப் பணி

அ1/931/2020

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்
நெறி வழிகாட்டும் அலுவலகம்,
விருதுநகர். நாள்: 22.05.2020

பெறுநர்

S.ஜெயபாரதி,
த/பெ. சங்கரன்,
கதவு எண். 3/37, K.சத்திரப்பட்டி,
வெம்பக்கோட்டை அஞ்சல் - 626 131
விருதுநகர்.

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் கீழ் - S.ஜெயபாரதி, த/பெ. சங்கரன், கதவு எண். 3/37, K.சத்திரப்பட்டி, வெம்பக்கோட்டை அஞ்சல், விருதுநகர் அவர்கள் சில தகவல் கோரியமை – தொடர்பாக

பார்வை: S.ஜெயபாரதி, த/பெ. சங்கரன், கதவு எண். 3/37, K.சத்திரப்பட்டி, வெம்பக்கோட்டை அஞ்சல், விருதுநகர் அவர்களது மனு நாள்: 19.03.2020 (இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள்: 23.03.2020 மற்றும் 18.05.2020)

பார்வையில் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட தங்களின் மனுவிற்கு கீழ்க்கண்டவாறு தகவல் அளிக்கப்படுகிறது.

**தகவல் எண் 1**

தங்களது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள VRD2011F00118093 வேலைவாய்ப்பு பதிவட்டை 20.06.2011 இல் பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**தகவல் எண் 2**

தங்களது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள VRD2011F00118093 பதிவெண் கொண்ட அடையாள அட்டையிலுள்ள விவரங்களின் படி 07.02.2013 இல் ஆதரவற்ற விதவை பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. 15.09.2010 முதல் பதிவுதாரர்கள் விவரங்கள் அனைத்தும் ஆன்லைன் இணையதளம் வாயிலாக பராமரிக்கப்பட்டு வருகிறது. தங்கள் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருமதி.முத்துமாரி அவர்களின் ஆதரவற்ற விதவை சான்றிதழ் இவ்வலுவலக பராமரிப்பில் இல்லையாததால் தாங்கள் கோரிய தகவல் அளிக்க இயலாது என்ற விவரம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**தகவல் எண் 3**

VRD2011F00118093 பதிவெண் கொண்ட அடையாள அட்டை மூன்றாம் தரப்பின் சம்மந்தப்பட்டதால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 11-ன் படி அளிக்க இயலாது என்ற விவரம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

22/5/2020

பொதுத்தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
விருதுநகர்.

22/5/2020

அனுப்பப்பட்டது
நாள்: 02.06.2020

Scanned with CamScanner